தினமலர்
உண்மையின் உரைகல்

# பார்வையாளர்களை கவர்ந்த பாலாதேவி சந்திரசேகரின் 'மவுலி' பரதநாட்டியம்



'மவுலி – காலத்தால் அழியாத மரபு' என்ற தலைப்பில் பெங்களூரில் நேற்று பரதநாட்டிய நிகழ்ச்சி நடத்திய பாலாதேவி சந்திரசேகர்.

**பெங்களூரு, ஆக. 9–**

மஹாராஷ்டிரா பக்த துறவிகளின் புனித யாத்திரையை, பிரபல பரதநாட்டிய கலைஞர் பாலா தேவி சந்திரசேகர், தனது பரத நாட்டியத்தால் நடித்து காட்டி, பார்வையாளர்களை மெய்மறக்க செய்தார்.

தமிழகத்தை சேர்ந்தவர், 'கலைமாமணி' பாலா தேவி சந்திரசேகர். பெங்களூரு மல்லேஸ்வரத்தில் உள்ள சேவா சதனில் நேற்று, 'மவுலி – காலத்தால் அழியாத மரபு' என்ற தலைப்பில் பரதநாட்டிய நிகழ்ச்சியை நடத்தினார்.

இந்த நிகழ்ச்சி, மஹாராஷ்டிராவில், 800 ஆண்டுகளுக்கும் மேலாக தடையின்றி தழைத்தோங்கி வரும் பழமையான ஆன்மிக புனித பயணங்களில் ஒன்றான, 'பண்டர்பூர் வாரி' மற்றும், 'வார்க்கரி சம்பிரதாயத்தின்' ஆன்மிக பெருமையை பறை சாற்றுகிறது.

மவுலி என்பது நடன நிகழ்ச்சி மட்டுமல்ல. ஞானேஸ்வர், நாமதேவ், ஏக்நாத், துக்காராம், ஜனாபாய், சொகாமேளா, சவதா மாளி, கோரா கும்பார், சேனா நாவி, நரஹரி சோனார், கான்ஹோபத்ரா, முக்தாபாய் உட்பட மஹாராஷ்டிர பக்த துறவிகளின் வாழ்க்கை, கவிதைகள், இசை, தத்துவத்துக்குள் அழைத்து செல்லும் ஒரு கலை பயணமாகும். இவர்களின் பக்தியால் மகிழ்ச்சியடைந்த விட்டல பாண்டுரங்களின் தெய்வீக தரிசனத்தில், உணர்ச்சிப்பூர்வமான உச்சத்தை அடைகின்றனர்.

இத்துறவிகளால் வெளிப்படுத்தப்பட்ட பக்தி, அடக்கம், சமத்துவம், கருணை, சுயநல மற்ற சேவையை பரதநாட்டியம் மூலம் பாலா தேவி உலகளவில் கொண்டு சேர்க்கிறார். ஆஷாடா ஏகாதசிக்கு 21 நாட்கள் முன்பு, புனித நகரமான ஆலந்தி – தேஹுவில் இருந்து புனித நகரமான பண்டர்பூருக்கு புனித யாத்திரை செல்வதை, 75 முதல் 80 நிமிடங்கள் நடனமாக நடித்து காட்டியதை, பார்வையாளர்கள் மெய்மறந்து ரசித்தனர்.

நடனம் முடிந்த போது, பார்வையாளர்கள் சிலர் உணர்ச்சி வசப்பட்டு கண்ணீர் சிந்தினர். இந்த நடனத்தின் மூலம், துறவிகளுடன் பயணித்தது போன்ற உணர்வை பெற்றதாக, அவர்கள் தெரிவித்தனர்.